தினமணி

# ‘கல்விக்கு நிதி தடையாக இருக்கக் கூடாது’

பெங்களூரு, பிப். 17: மாணவர்களின் கல்விக்கு நிதி ஒதுபோதும் தடையாக இருக்கக் கூடாது என்று ஜெயின் பல்கலைக்கழகத் துணை வேந்தர் சுந்தரராஜன் தெரிவித்தார்.

பெங்களூரில் புதன்கிழமை உயர் கல்வி பயில மாணவர்களுக்கு நிதி வழங்கும் விழாவில் கலந்து கொண்டு அவர் பேசியது:

இந்தியாவை 100 சதம் கல்வி பெற்ற நாடாக உருவாக்க பிரதமர் உள்ளிட்டோர் கடும் பணியாற்றி வருகின்றனர். கர்நாடகத்தை முழு கல்வி பெற்ற மாநிலமாக்க முதல்வரும் சிரத்தை எடுத்து பெரும் முயற்சி செய்து வருகிறார்.

இந்த நிலையில், நிதி நெருக்கடியால் ஒரு சில மாணவர்கள் உயர் கல்வி பயிலுவதில் தடை ஏற்பட்டுள்ளது. இதை கருத்தில் கொண்டு உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஜெயின் பல்கலைக்கழகம் உள்பட பல்வேறு பல்கலைக்கழங்கள் நிதி உதவி செய்து வருகின்றன.

உயர் கல்வி பயிலும் மாணவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு நிதி ஒரு பிரச்னையாக இருக்கக் கூடாது. ஏழையாக இருந்தாலும் கல்வி பயில ஆர்வமாக உள்ள மாணவர்களுக்கு அரசு மட்டுமன்றி தனியாரும் உதவ முன்வர வேண்டும் என்றார்.